ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஒவ்வொரு பிராணியும் ஜன்மாந்தர வாஸனைக்கேற்றபடி கார்யங்களிற்பிரவிருத்திக்கின்றது. அசனாற்றான் பிறப்புமுதற்கொண்டே வெவ்வேறு விதமாகப்பிரவர்த்திக்கின்றார்களேயன்றி எல்லோரும் ஒரேவிதமாகவே பிரவர்த்திசெய்கிறதாகக் காணப்படவில்லை. சிலர் ஹிம்ஸாகரமான கார்யத்தில் பிறப்புமுதற்கொண்டே ஆசை கொள்ளுகிறார்கள். சிலர் சாந்தர்களாயிருக்கிறார்கள். சிலர் காமவெறி பிடித்தவர்களாகக் காணப்படுகிறார்கள். சிலர் பரவைராக்யத்தை அடைந்து இல்வாழ்க்கையையுந்துறந்துவிடுகிறார்கள். சிலர் கடுஞ்சினம் கொள்ளுகிறார்கள். சிலர் மிகப்பொறுமையுடையவர்களாக விளங்குகிறார்கள். இவ்வாறு பல விஷயங்களில் பார்த்தால் பிராணிகள் விசித்திரமாகப் பிரவிர்த்தி செய்வதற்கு ஒரு காரணமிருக்கவேண்டும். காரணமின்றி ஒரு கார்யமுமுண்டாகாதல்லவா? அதைத்தான் நம் சாஸ்திரங்களில் ஜன்மாந்தரீய வாஸனை என வியவஹரிப்பார்கள். அத்தகைய வாஸனா பலத்தினாற்றான் தற்காலத்தில் சில மேதாவிகள் மடிஸஞ்சி வைத்துக்கொண்ட வைதிகர்களிடத்தில் மீளாக்கோபம் கொள்ளுகிறார்கள். மஹானுபாவர்களான வைதிகசிரேஷ்டர்கள் இவர்களுக்கு என்ன அபகாரம் செய்தார்களோ தெரியவில்லை. இவ்விதம் துவேஷங்கொண்டவர்களிடம் வைதிக சிரோமணிகள் எவ்வளவு பொறுமையாயிருந்தும் பயன்படாமல் போய்விடுகிறது. ஸ்ரீராமமூர்த்தி வேணுமென்றாவது ஒருசமயம் ''தீவ்விரகோபத்தைவரவழைத்துக்கொண்டார்'';—என்பதுபோல வைதிகர்மனதிலும் கோபமணுகும்படியாய் விடுகின்றது. ஆகவே வைதிகர்களும் மற்றவர்களும் சேர்ந்திருக்கும் நம் பாரதபூமியில் பரஸ்பரம் ஒற்றுமை பாராட்டமுடியாமல் போகிறது. எல்லோரும் ஒற்றுமையாயிருந்து பெரியதோர் கார்யத்தை ஸாதிக்கவேணுமென்று வார்த்தைமாத்திரம் சொல்லிக்கொள்ளுகிறார்களேதவிர அதற்குத்தக்கபடி நடக்கவில்லை. ஜாதிபேதமழியவேண்டுமெனக் கருதுகிறார்கள். அவர்களை இதுகேட்போம். மூகம்மதியர்கள் தன் ஜாதியை மாற்றிவிடுவார்களா? அவர்கள் மாற்றாவிடில் மற்றவர்மாத்திரம் ஜாதியையழித்துவிடுவதினால் என்னபயன் ஏற்படும். மகம்மதியர்கள் ஜாதி அப்படியே இருக்கட்டும். மற்றவர்ஜாதி அழியட்டுமென்று நினைப்பதும் கூறுவதும் வர்ணாச்ரமத்தில் அகாரணமான துவேஷத்தைமாத்திரம் காட்டுகிறதேயன்றி வேறில்லை. அன்னத்துவேஷமும் பிரமத்துவேஷமும் ஆயுஸ்ஸைக்குறைக்குமென்று உண்மையுணர்ந்த பெரியார் அனுபவ ஸாக்ஷிகமாககொண்ட சித்தாந்தமாகையால் எல்லோருக்கும் க்ஷேமத்தையே விரும்பும் ஆஸ்திகமஹாஜனங்கள் ப்ரம்மத்துவேஷிகளும் அந்தத் துவேஷத்தால் கெடுதலையடையவேண்டாமென்ற கருணையால் அவர்களுக்கும் வர்ணாசிரம தர்மத்தின்மீது துவேஷம்வேண்டாமென்ற ஹிதோபதேசத்தைச் செய்கிறார்கள். அதைக்கேட்டு யாவரும் ஸரிவரநடந்து க்ஷேமத்தை அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
ப்ரஜாபதி-ஸு ஆனிமீ ௨௫௳

# கலிகல்யாண கோலாஹலம்.

ஐய, தற்காலம் விவஸ்தை சிறிதுமின்றி கலிமகாராஜன்பெருமை ஓங்கி வளர்ந்து வருவதை அறியாதார் எவருமிலரன்றோ? இக்கலியில் கண்ட புதுமைகள் அனேகமிருப்பினும்அவன் பெண்பாலரிடம் செலுத்தும் போன்பை மட்டும் இவ்விடம் எடுத்து விரிப்பாம். அவன் ஆடவராண்மையைக்குறைத்து மங்கையர்க்கு அதை வளர்த்து வருகிறான். மாதர்களதிகாரம் வளர்ந்தது. மணவாளனதிகாரந்துலைந்தது. இதனுண்மையை விசாரிப்பின் இதற்குக் காரணம் ஆராய்ந்தவரை தர்மவிபரீதமான கல்யாணமே எனத்தோன்றுகிறது. இவ்விஷயத்தைப் பற்றி எழுதுவதற்கு முந்தியே தற்கால பண்டிதரை வேண்டிக்கொள்வதாவது:—

ஏதேனும் எம்மைத்தூற்றாதிருக்க வேண்டுமென்றே யாமுயல்வதெல்லாம் இந்த தேசத்திற்குத் தற்காலமுண்டாயிருக்கும் துர்பாக்யத்தை விலக்கவேண்டுவதேயன்றி மற்றொன்றுமில்லை. இக்காலத்தில் தர்மலோபம் பலவிடத்தில் வியாபித்து வருவதையும் அதனால் பலவிதமாய் நம் முன்னோரடைந்த பெருமை குறைந்து வருவதையும் எவருமறிவார். அதற்குக்காரணமின்னதென அநேக புத்திமான்கள் யோஜித்து எழுதிவருகின்றனர். ஆயினும் அஃதோர் நிலைபெற்றதல்ல. தற்காலம் இத்தேசத்திலுள்ள குறைகள் பல. சத்யம், வித்தை, வணக்கம், தர்மம், பலம், பசு, பணம் இவையெல்லாம் ஒருவாறொழிய, வருட்படி குறைய, பிணிமலிய பிணக்கு ஓங்க, பற்பலவிதமாய் ஒடுங்கி பெயர்மட்டில் மனிதன் என வழங்கப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்கு புத்தி நிதானமில்லை. புலங்கள் நல்வழியிலில்லை. மனத்திற்குஉற்சாகமில்லை. உண்பது உறங்குவது உலாவுவதுஉல்லாஸமாய்நிற்றலுங்கூடஉள்ளபடி கைகூடுவதில்லைஇவர்களுக்குநல்நித்திரைஆரோக்யம்சுமுகம்இவைகள்கிடைப்பதுமிகவரிது.சந்தானங்களோ மிகச்சொற்பம்.க்ஷேத்

ரம் நல்வழிபட்டதல்ல. அவர்களையும் சீர்திருத்த இயலாது. அது கர்ப்பத்திலிருந்து தொடர்ந்து வந்த ரோகங்கள். எவ்வித சிகித்ஸைகளாலும் ஆறுவதில்லை. இயற்கையில் சிறிதும் பலமில்லாதவர்க்கு வாஜீகரணம் பல செய்யினும் மாதரை மணத்தற்கும் ஆண்மையுண்டாவதில்லை. அனேக ரசாயனங்களைச் செய்வித்தும் வேலை செய்யத்தக்க திடமும் இவனுக்குண்டாவதில்லை. இவர் சதாசாரங்களை அனுஷ்டிப்பதற்கும் மனோபலமில்லை. பாருங்கள்! இக்காலத்திலோ பணப்பேய் எவரையும்பிடித்தாட்டுகின்றது அப்பேய் பெண்கள் வழியிற்பிடித்தது இருவகை. சிலர் பெண்களை ஆயிரம் இரண்டாயிரத்துக்கு விக்கிரயம் செய்கின்றனர். மற்றும் சிலர் துட்டுடையவனுக்குப்பெண்ணைக்கொடுக்கமுயன்று அளவிறந்த பொருள்களை அழிக்கின்றார்கள். இவ்விஷயங்களில் இருவர்களுக்கும் நேரிடும் சங்கடங்கள் பல. முதல் வகுப்பினர்களுக்குக் கன்னிகைகள் கடையில் வைத்திருந்த பொருளாகவே அதற்கு எவன் உத்தேசப்படி பொருளைக்கொடுப்பனோ அவனே குலஹீனனாயினும் வயோதிகனாயினும் அலியாயினும் அங்கஹீனனாயினும் ஏழையாயினும் ரோகியாயினும் மூடனாயினும் குடியனாயினும் திருடனாயினும் எவனும் வரனாகலாம். மற்றவர்க்கோ, காசுமட்டிலிருந்தால் அவன் முறையிலண்ணனோ, தம்பியோ, புத்திரனோ, தகப்பனோ அல்லது மருமகனோ அம்மான்மகன் அத்தைமகன் அல்லது சிறியதாய் பெரியதாய்மகன் அல்லது சகோதிரன் அல்லது சமானப்பிரவரன் அல்லது சிசு அல்லது தடிகொண்டு நடக்கும் கிழவனாயினும் அவனும் சிறந்தவரனாகின்றான். இஃதன்றி குலஹீனன் முதலிய முற்கூறிய இலக்ஷணத்தவரும் இதிற் சேருவதுண்டு. 40-வயதிற்கு மேல் உலகத்தில் காடாதவர் குலமும், நீடித்த அபஸ்மாரங்கள் பீடித்த குலமும் உத்தமவரனாகின்றது. எல்லா இலக்கணங்களுக்கு மேலான இலக்கணங்கள் இங்கிலீஷ் படிப்பது. கலியின்கொடுமையைப் பாருங்கள்! உலகமெங்கும் உள்ள ஜனங்களில் ஐந்தில் மூன்றுபங்கு பெண்களாயிருக்கின்றார்கள். இச்சமயம் எடுத்த ஜனகணிதத்தில் 100-மனிதர்க்கு 60-பெண்களிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இவர்களுக்குள் சிலர்செல்வர்களாயினும் அவரே எல்லோருக்கும்வரமாவதால் அவர் குலத்தில் பெண்களைக் கொடுக்க வேண்டி திரவியத்தைச் செலவிடுகிறார்கள். கல்யாணம் செய்வதற்கு முன்னரே அடியிற்கண்ட

விஷயங்களில் இவ்வளவு செலவிடவேண்டுமென்று தீர்மானம் செய்துவிடுகிறார்கள். மாப்பிள்ளைக்குக் கொடுக்கவேண்டியதோர் பெருந்தொகை சம்மந்திமரியாதை, சந்தி செய்வித்தோர்க்கு லஞ்சம், சதிர்க்குப் பாட்டுக்கு வாத்தியங்கள் பலவகைக்கு கொட்டகைப் பந்தலுக்கு தீவட்டிகளுக்கு பாணவேடிக்கைகளுக்கு புஷ்பத்துக்கு வாசனைத்ரவ்யங்களுக்கு பழம் பாக்குவெற்றிலைக்கு பந்துக்களுக்கு ஸ்னேகிதர்களுக்கு பெருமையான சமாராதனைகளுக்கு குயவன் கம்மாளன் முதலிய தொழிலாளர்களுக்கு ஜவுளி வியாபாரிகளுக்கு ஆகிய இவற்றிற்கெல்லாம் எல்லையற்றபடி தையற்காரர்களுக்கு கொத்தன்களுக்கு எவ்வித விவஸ்தைகளிலும் அடங்காது செலவழித்து விவாகம் நடக்கின்றது. அதுமட்டோ அக்குழந்தை பருவமடைந்தகாலத்தில் ஓர்பெருஞ்செலவு. நிஷேக முகூர்த்த சீர் சிலவில் மனிதர் மீள்வது மிகக்கடினம். காப்பு சீமந்தங்களில் கரைகாண்பதரிது. உள்ள காலத்தும் பிரஸவசிகித்ஸை செலவு. ஆகிய இவை நித்தியகன்மங்களாய் நடந்துவருகின்றது. அப்பெண்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் உபநயன விவாஹமென்னும் இரு சடங்குகள் நிறைவேறும்வரை ஓயாது சிறிது சிறிதாகப் பொருள் கொடுத்துவர வேண்டும். இது நைமித்திகம். ஆடி, பொங்கல் திருவாதிரை முதலிய சில தினங்களில் சிற்றுண்டி சிறு தக்ஷிணையுமுண்டு. தன் வீட்டில் நடக்கும் எவ்வித சுபசடங்குகட்கும் முதல் மரியாதை. இது காம்யகன்மம்,, இனி விரிக்கிற் பெருகும். பெற்றோர் கொடுப்பதற்கும் பெண்கள் வாங்குவதற்கும் எல்லையில்லை. அவரவர் மூச்சுள்ளவரை இவ்விதம் ஒன்றிரண்டு மூன்று கன்னிகைகளுக்குச் செய்யவேண்டி நேர்ந்தது, அவன் ஏழையும் பிள்ளைகளைப் பெற்றவனுமாயின் அவன் பெண்களுக்குச் செலவழித்து அவன் ஏழையான பிறகு தன்பிள்ளைக்கு எங்கேனும் 1000 ரூபா கொடுத்து வாங்கவேண்டி நேரிகிறது. ஆகையால் இந்த்க் கிரஹஸ்தன் பட்ட பாட்டைக் கவனியுங்கள்! பிறந்தது முதல் வயிறு வாயையொடுக்கி சம்பாதித்த பொருளை இங்ஙனம் வீணில் செலவழித்து ஒழிந்தால் அவன் மனமும் சரீரமும் துயருற்று வாடாதோ! அறிஞர்காள் அவர் குழந்தைகள் தான் பிழைப்பதெப்படி? எல்லாவற்றையும் தொலைத்து மாப்பிள்ளைக்குமட்டுமா இது? எவ்வளவு அவனுக்குக் கொடுப்பானே அதில் பன்மடங்கு ஆட்டம், பாட்டம், காவணம் கோவணம் முதலியவற்றிற்

தொலைக்க வேண்டியிருக்கிறது. இங்கு பெற்றோருக்கு சுகமில்லை என்று காட்டினோம். இவ்வளவுபெருஞ்செலவுடன் புருடன் கிரஹம் சென்ற பெண்கள்தான் நன்கு வாழ்கின்றார்களோவெனின் அதுவுமில்லை.

சிலவிடத்து பால்யத்தைவிட்டு 12-வயதுக்குமேல் 16-வது வரையில் விவாகஞ்செய்கின்றார்கள். சொன்னால் வெட்கம், சொல்லாமற்போனால் துக்கமென்றபடி சிலவிடங்களில் கர்ப்பமான பிறகு விவாகம் நடந்ததாகக் கேள்வி. பண்டிதர்களோ இவ்விதம் அநர்த்தம் ஓங்கிவருவதைத் தடுப்பதில்லை. இக்காலத்திய ஜனங்கள் ஆஸ்திகர் நாஸ்திகர்களென இருதிறத்தவர்கள். இவர்கள் ஆஸ்திகர்களாயின் புருடருக்கும் ஸ்திரீகளுக்கும் விவாகவயதைத் துணிந்தோதும் சாஸ்திரங்களை அவர் ஏன் கவனித்தாரில்லையோ? நாஸ்திகராயின் உலகரீதியைப் பார்த்துச் செய்யவேண்டுமே. பாருங்கள்! இவ்விஷயத்தில் தர்மசாஸ்திரகாரர்கள் கூறுவதிது— '7-வயதில் பிராமணருக்குபநயனம்' இங்கு பிராமணன் என்னுஞ் சொல் ஆண் பெண் இருவரையும் குறிக்குஞ்ஜாதிச் சொல், அதனாற்றான் 'ஸ்திரீகளுக்கு உபநயனஸ்தானத்தில் விவாகத்தை மநு விதித்தார்' என்றும் உபநயனகாலமே ஸ்திரீகளுக்கு விவாககாலமென்றும் விவாகஞ்செய்வதே அவர்களுக்குபநயனமென்றும் பல வசனங்கள் மன்வாதி தர்மசாஸ்திரங்களிலிருக்கின்றன. இதனால் உபநயனமென்பது பிராமணனுக்கு எவ்விதம் அவசியமோ அவ்விதம் ஸ்திரீகளுக்கு அவசியமும் வைதிகமுமென்ற ஸம்ஸ்காரமாக ஏற்பட்டது. ஆகவே இஃதோர் கால வரமுறைக்கடங்கியதேயன்றி வேறில்லை. புருடர்களுக்கு ஐந்தாம் வயதுமுதல் 15ம் வயதுவரை உபநயனகாலம் நியமிக்கப்பட்டிருக்கின்றதே. அங்ஙனம் பெண்களுக்குக்கூடாதோவெனின் கூடாது. தர்மசாஸ்திரங்களில் 'எதுவரையில் பெண்கள் பருவமடையாளோ அதுவரை விவாகஞ்செய்யலா'மென்றும் விவாகத்திற்குமுன் பருவமடைந்தால் அகாலத்தில் விவாகஞ்செய்ததாமென்றும், எந்த கன்னி விவாகம் ஆகாது தகப்பன்வீட்டில் பருவத்தையடைவாள், மாதந்தோறும் அவள் சோணிதத்தைப் பிதா அருந்துவான் என்க. இங்கு இரகசியமிது— எதுவரை போதுமான வயது வாரது அதுவரை உபநயனவிவாகங்கள் செய்யலாமென்பதுட்கருத்து. புருடருக்கு 16வது வயதும் பெண்களுக்குருதுகாலமே ப்ரௌடியைக்

குறிக்கும் காலமென்பது ஆன்றோர் கருத்து அதையே தற்காலத்திய அரசர்களுமொப்பியிருக்கின்றார்கள். இவ்வித முக்கிய காலத்தில் உபநயனவிவாகங்களைப்பெற்ற மக்கள் மங்கையர்களே நமது தர்மசாஸ்திரங்களிற் கூறப்பட்ட ஸகல ஸத்கர்மங்களைச்செய்ய அதிகாரிகளென ஏற்படுகிறது. புருடர்களுக்கு 16-வது வயது தோன்றின் உபநயனகாலம் நீங்கும். பெண்களுக்குப் பருவகாலந் தோன்றின் விவாககாலம் நீங்குமென்பது இங்கு பெறப்பட்ட துணிபு. ஆகலாற்றான் ஸ்திரீகளுக்கு விவாககாலம் வரையறுக்குமிடம் வயதைக் குறித்தாரில்லை. உலகத்தில் இக்காலம் நடக்கும் இவ்விஷயத்திலுள்ள கொடுமையை எடுத்துரைக்க எமது நாவு கூசுகின்றது. ஆகையால் அத்தகைய அதர்மத்தில் போகாமல் யாவரும் உசிதகாலத்தில் விவாகத்தைச்செய்து தர்மத்தைப் பரிபாலிப்பார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

# அத்வைதமதமே வைதிகம்

(514 பக்கத்தொடர்ச்சி)

ஆத்மஜ்ஞானம் முதலியது பிரமாணம்வஸ்து இவைகளுக்கு அதீனமாய் உண்டாவதால் அது நேரில் புருஷனால் செய்யப்படாமல் போனாலும் ஆத்மஜ்ஞான ஸாதனமான மனதின் பிரணிதானம் முதலியது புருஷனால் செய்யப்படுவதால் அதன் மூலமாக ஜ்ஞானமும் புருஷனால் செய்யப்படுவது என்பதை முன்னிட்டு அதிலும் தர்மலக்ஷணம் பொருந்தும் आत्मावा अरे द्रष्टव्यः என்பது முதலிய விடங்களில் ஆத்மாவைப் பார்க்கவேண்டுமென்று ஆத்மஜ்ஞானத்தை விதிக்கும் விதிப்பிரத்யயத்திற்கும் அதன் ஸாதனமான சிரவணம் முதலியதை விதித்து அதன் மூலமாக ஜ்ஞானத்தில் விதியைப் போதிப்பதாக தாத்பர்யம் ஒப்புக்கொள்வதும் பொருந்தும். ஆகையால் பிரும்மத்தில் செய்யப்படுந்தன்மை இல்லாததால் தர்மலக்ஷணத்திற்கு அதிவியாப்தி தோஷம் கிடையாது. அல்லது தர்மலக்ஷணத்தில் இஷ்டத்திற்கு ஸாதனமென்பதில் அஸாதாரண காரணமென்று அர்த்தங்கொண்டும் இஷ்டத்

திற்கு அஸாதாரண காரணமென்று வேதத்தால் போதிக்கப்படுவது தர்மமென்று தர்மலக்ஷணம் கூறி பிரும்மம் எல்லாவற்றிற்கும் பொதுவான ஸாதாரணகாரணமானதால் அதில் அதிவ்யாப்தி கிடையாது என்றும் கூறலாம் இவ்வித மூன்றுவித பிரகாரத்தினாலும் பிரும்மத்தில் தர்மலக்ஷணம் வாராததினால் தோஷமில்லை. பிரும்மம் தர்மமன்று என்றுகூறினால் धर्मोविग्रहवान्रामः 'உருக்கொண்ட தர்மமே ராமன்' என்றும், येचवेदविदोविप्रायेचाध्यात्मविदोजनाः । तेसर्वेपि वदन्त्येनं कृष्णं धर्मं सनातनम् ।

"வேதவித்துக்களான யாதொரு விப்ராதிகளுண்டோ அத்யாத்மவித்துக்களான யாதொரு ஜனங்களுண்டோ அவர்களெல்லோரும் இந்த கிருஷ்ணபரமாத்மாவை ஸநாதனமான தர்மமென்று கூறுகின்றார்கள்" என்றும் புராணவசனங்களில் ராமகிருஷ்ணாத்யவதாரத்தோடு கூடிய பிரும்மத்தினிடத்திலும் தர்மசப்த வியவஹாரமிருப்பது பொருந்தாதெனில் கூறுவாம்.

प्रणम्रेषु महीपेषु प्रसादो मूर्तिमानयम् ॥

'வணங்கின அரசர்கள் விஷயத்தில் இவர் உருக்கொண்ட பிரஸாதமேயாவர்' என்று ஓர் சக்ரவர்த்தியைப் பிரஸித்தமான பிரஸாதத்திற்கு விலக்ஷணமாய் உருவெடுத்துவந்த பிரஸாதமிவரென்று ஸ்துதிப்பதுபோல் பிரஸித்தமான தர்மத்திற்குவிலக்ஷணமாய்உருவெடுத்துவந்த தர்மமென்றும் ஸநாதனமான தர்மமென்றும் ராமகிருஷ்ணாதி மூர்த்திகளை ஸ்துதிப்பதில் அந்த புராண வசனங்களுக்குக் கருத்தேதவிர தர்மபதத்திற்கு ஈசுவரனே அர்த்தமென்று சொல்வதில் கருத்தில்லை. அதனால்தான் பாதராயணாசார்யாள் फलमतउपपतेः என்னும் ஸூத்திரத்தினால் ப்ரகிருதமான பிரும்மத்தைக் கர்மபலதாதாவென்று சொல்லிவிட்டு அதற்குப்பிரதித்வந்துவியாகக்கர்மமே பலப்பிரதம் என்று சொல்லும் ஜைமினி மதத்தைக்கூறும்போது धर्मं जैमिनिरतएव என்று தர்மபதத்தால் கர்மாவை வியவகரித்திருக்கின்றார்கள். பிரும்மமும் தர்மபதத்திற்கு அர்த்தமாயிருந்தால் பிரும்மத்தைவிலக்கிக் கர்மாவை சொல்லுமிடத்தில் தர்ம பதப்ரயோகம் பொருந்துமா. ஆகையால்தர்மம்வேறு, பிரும்மம்வேறுதர்மம்பிரும்மம் இவைகளை

ப்ரதிபாதிக்கும் சாஸ்திரங்களும் வேறு. இவ்விரண்டு சாஸ்திரங்களும் வேறு என்னும் விஷயம் பூர்வோத்தரமீமாம்ஸாசாஸ்திரபேதமீமாம்ஸா என்றும் மற்றொரு உபன்யாஸத்தில் விஸ்தாரமாக நம்மால் நிரூபிக்கப்படும். இவ்விதம் தர்மலக்ஷணம் ஒருவிததோஷமுமில்லாமல் முடிந்தது. இவ்விதம் கூறப்பட்ட வேதத்தினால் இஷ்டஸாதனமென்று போதிக்கப்படுவது தர்மமென்னும் தர்மலக்ஷணம் வேதத்தினால் ஸாக்ஷாத்தாக இஷ்டஸாதனமென்று போதிக்கப்படும் யாகம் முதலியதிலும் வேதத்தினால் வேதமூலகார்த்தாபத்தியின் துவாராவாகப் பாரம்பரையால் இஷ்டஸாதனமென்று போதிக்கப்படும் அபூர்வத்திலும் பொருந்துவதால் தர்மபதம் பிரவிருத்திப்பதற்கு நிமித்தமாயுள்ள இந்த லக்ஷணம் இரண்டிலுமிருப்பதால் தர்மம் என்னும்பதம் சக்தியென்னும் முக்யவிருத்தியினாலேயே யாகம் முதலியது அதனாலுண்டாகும் அபூர்வம் இரண்டையும் போதிக்கும் ஆகையால் இரண்டுமே தர்மபதத்திற்கு அர்த்தம் என்றுகூறுவதினாலும் பாதகமில்லை. என்று பாட்டாஹஸ்யத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஈண்டு இதுகாறும் கூறியவாற்றால் தர்மத்தின் ஸ்வரூபம் இன்னதென்று தெரிந்தது. அதாவது — யாகம் முதலியதும் அதிலுண்டாகும் அபூர்வமும் தர்மத்தின் ஸ்வரூபமென்று முடிவாயிற்று. இந்ததர்மமானது ஸுகரூபமாகாது ஸுகத்திற்கு ஸாதனமாயுள்ளது. இந்த தர்மத்தினால் ஏற்படும்

यन्न दुःखेन संभिन्नं न च ग्रस्तमनन्तरम् ।
अभिलाषोपनीतञ्च तत्सुखं स्वःपदास्पदम् ॥

'எந்த ஸுகமானது இஹலோகத்தில் அனுபவிக்கப்படும் ஐஹிக ஸுகமானது ஸுக ஸாதனங்களை ஸம்பாதிப்பதால் உண்டாகும் துக்கத்தோடு கலந்திருப்பதுபோலில்லையோ அதாவது—ஸாதன ஸாமக்ரீ ஸம்பாதனக்லேசமில்லாமலே இச்சாமாத்திரத்தால் கிடைக்குமோ பிறகு ஸுகத்தை அனுபவிக்கும்பொழுதும் இஹலோகத்தில் சில நிஷித்தமான விஷயங்களை அனுபவிக்கும் பொழுது அது பிறகு துக்கத்திற்கு ஹேதுவான பாபத்தைக் கொடுப்பதால் துக்கத்தால் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அது போலில்லையோ அதாவது—விதிநிஷேத ரூபமாகிய சாஸ்திரம் மனுஷ்யாதிகாரிகமானதால் தேவஜன்மாவினால் அனுபவிக்கப்

படும் எந்த விஷய ஸுகமானது பாபஸம்பந்தமில்லாததால் பிறகும் துக்கத்தோடு ஸம்பந்தப்படுவதில்லையோ. “सस्वर्गस्स्यात् सर्वान्प्रत्यविशिष्टत्वात्” ‚விச்வஜித் என்னும் யாகத்தால் ஸாதிக்கப்படும்பலம் ஸ்வர்க்கம் அது எல்லோராலும் ஆசைப்படப்படுகிற படியால்,என்கிற ஜைமினிஸூத்திரப்படி எதுஎல்லோராலும் அபிலஷிக்கப்பட்டதோ அப்பேர்பட்ட ஸுகமே ஸ்வர்க்க பதத்திற்குப் பொருள்’ என்ற வசனப்படியுள்ள லக்ஷணம் பொருந்திய ஸ்வர்க்கம் முதலியதே ஸுகரூபமாயுள்ளது. ஆகையால் தர்மம் ஸுகரூபமாயில்லாமல் ஸுகஸாதனரூபமாயுள்ளதால் கௌணபுருஷார்த்தமென்று முடிவாயிற்று. இனி அர்த்தமென்னும் இரண்டாவது புருஷார்த்தத்தைப்பற்றி விசாரிப்போம்.

(தொடரும்)

போலகம், ஸ்ரீராமசாஸ்திரிகள்

# மங்களவாதம்- ஓர் ஸமாதானம்.

“ஓம் அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸாஓம்” என்ற சூத்திரவியாக்யானவசரத்தில் அதசப்த: மங்களார்த்த:, அதிகாரானந்தர்யார்த்தஸ்ச என்று ஸ்ரீ மத்வர் தமது ஸூத்ரபாஷ்யத்தில் திருவாய்மலர்ந்திருக்கிறார். அவ்விஷயமாக ஸ்ரீமான் காளிரங்காசாரியார் எழுப்பிய 1.மற்றபாஷ்யகாரர்கள் சொல்லாதமங்களார்த்தத்தை எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? 2. பல அர்த்தங்களையுடைய ஒரு சப்தத்தின் பல அர்த்தங்களை ஒரே இடத்தில் எப்படி பண்டிதர்கள் ஒப்புக்கொள்ளக்கூடும்? என்ற இரண்டு ஆக்ஷேபங்களை நமதுவாசகர்கள் அறிந்திருப்பார்கள் அவற்றிற்கு என்னுடைய யதாமதி ஸமாதானத்தையும் அறியுமாறு வேண்டுகிறேன்.

இம்மாதிரியான ஆக்ஷேபங்களுக்கு முதற்காரணம் அர்த்த: என்ற பதத்திற்கு 1. பிரயோஜனம், 2. பொருள், என்ற பல அர்த்தங்கள் அமைந்திருப்பதேயாகும். மங்களார்த்த: என்பதில் அர்த்த சப்தத்திற்குப் பிரயோஜனம் என்று அர்த்தம். அதிகாரானந்தர்யார்த்தஸ்ச என்பதிலோ அர்த்த சப்தத்திற்குப் பொருள் என்று அர்த்தம். ஆகவே அத சப்தம் மங்களத்தைப் பிர

யோஜனமாயுடையதாகவும் ஆனந்தர்யம் (பிறகு) என்ற பொருளையுடையதாகவும், உள்ளது என்பதே ஸ்ரீ மதவரின் அபிப்பிராயமே தவிர மங்களம் அதசப்தத்தின் பொருள் என்றல்ல. அதிகாரம் முதலியவற்றைச் சொல்வதின்பொருட்டு பிரயோகிக்கப்பட்ட அதசப்தமானது சங்கம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், முதலியவற்றின் த்வனிபோல் காதால் கேட்டமாத்திரத்தினாலே ஏதோ ஒருகாரியத்தைமுன்னிட்டு எடுத்துச்செல்லும் பூர்ணகலசதர்சனம் போலும் குளிரைப்போக்கவே மூட்டப்பட்ட அக்னியானது பிரகாசத்தையும் கொடுப்பதுபோலும் மங்களகரமானதாகவும் ஆகி சாஸ்திரம் நிர்விக்னமாய் முடிவு பெறும்படி செய்கிறது. மங்களார்த்த விஷயமாக ப்ராசீனர்களாலேயே எழுதப்பட்ட சங்கைகள்யாவும் நியாயஸுதையில் விஸ்தாரமாகக் கண்டனம் செய்யப்பட்டிருப்பதையும் அடியிற்கண்ட வாக்யங்களால் காண்க.

अत्र यत्परेषां दूषणं मङ्गलस्य वाक्यार्थे समन्वयाभावात् इति । तथाहि। पदार्थ एवहि वाक्यार्थे समन्वीयते । स च वाच्यो लक्ष्यो वा । नचेह मङ्गलमथशब्दस्य वाच्यं लक्ष्यं वा ? किंतु मृदङ्गध्वनिवत् अथशब्दस्य कार्यं । न च कार्यज्ञाप्ययोः वाक्यार्थे समन्वयः शाब्दे व्यवहारे दृष्टः। अस्तु वा मङ्गलस्य पदार्थत्वं तथापिनवाक्यार्थे समन्वयः। तथाहि। न तावन्मङ्गळं ब्रह्मजिज्ञासायाः कर्तृकर्मकरणभावेन वाक्यार्थे अन्वेति । कर्त्राद्यन्यतमभावे प्रमाणाभावात् । कारकान्तराणां विद्यमानत्वाच्च । नापि सामानाधिकरण्येन समन्वयः । जिज्ञासा मङ्गलं इति । प्रशंसापरतया अर्थवादत्वप्रसंगात् इति । तदेतेन अपास्तं भवति। अस्माभिरपि आनन्तर्याभिधेयः अथशब्दः श्रुत्या मङ्गलप्रयोजनः इत्यंगीकारात् ॥ इति ॥

இவ்விதம் பிறர்கள் அர்த்தம் கூறியிருந்தாலும் கூறுவிட்டாலும் அடியிற்கண்ட ஆக்ஷேபம் கிளம்புவதால் அனைவரும் இவ்வர்த்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். அதாவது— மங்களாசரணமில்லாததால் (கடவுள் வணக்கத்துடன் ஆரம்பிக்கப்படாததால்) இந்த பிரம்மமீமாம்ஸா சாஸ்திரம் ஆரம்பிக்கத் தகுந்ததல்ல. மங்களாசரணத்தை முன்னிட்டுக்கொண்டு

இயற்றப்பட்ட சாஸ்திரங்கள் தாம் நிர்விக்னமாய் முடிவுற்று பிரசாரமடைந்து வருவன. மங்களாசரணமில்லாமல் துவக்கப்பட்ட சில நூல்கள் முடிவுபெற்றிருப்பதாலும் மங்களாசரணத்துடன் தோன்றிய சில நூல்கள் முடிவுபெறாமல் நின்றுவிட்டபடியாலும் கிரந்தம் முடிவுபெற அது காரணமல்லவென்று கூறுதல் தகாது.

அப்படியாகில் மழைக்குக்காரணமென்று அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட காரீரி முதலிய இஷ்டிகளும் மழைக்குக் காரணமல்லவென்று ஏற்பட்டுவிடும். ஆனால் காரீரி மழைக்குக் காரணமென்றவிஷயத்தில் பிரமாணமில்லாவிட்டாலல்லவோ அவ்விதம் ஏற்படும். சுருதி ப்ரமாணம் அவ்விஷயத்தில் இருப்பதால் காரீரி இஷ்டியில்லாமலேயே மழைபெய்தால், ஸ்வர்க்கத்துக்கு தர்சபௌர்ணமாஸங்கள், த்ரிவர்ணபரிசர்யை முதலிய பல காரணங்கள் இருப்பதுபோல் மழைக்கும் பல காரணங்களுண்டென்றும் காரீரி இஷ்டி அனுஷ்டிக்கப்படினும், மழை பெய்யாவிடில் கர்த்தா, காரணம் முதலிய ஸாமக்ரீகளின் பால் குறைவுகள் இருக்கவேண்டும்என்றும், அவ்விதகுறைவுகளிருப்பதாகத்தோன்றுவிட்டால் ப்ரபலமான ப்ரதிபந்தகம் (நெருப்பு கொளுத்தாமலிருக்க மணிமுதலிய பிரதிபந்தகமிருப்பதுபோல்) இருக்கவேண்டும் என்றும் நாம் கல்ப்பிக்கவேண்டும். இவ்விதமானால் ஸாமக்ரீ குறைவின் சந்தேகத்தாலோ ப்ரதிபந்தத்தின் ஸந்தேகத்தாலோ யாகம்அனுஷ்டிக்கப்படவே வேண்டாம் என்றால் மானிடர்களின் பிரவிருத்தி உத்ஸர்க்கத்தையும் நிவிருத்தி அபவாதத்தையும் பொறுத்திருக்கிறது. அவ்வாறில்லாவிடில் மேற்கண்ட சந்தேகம் போஜனம் முதலிய ஒவ்வோர் காரியத்திலும் ஏற்படுமாதலால் எல்லா காரியங்களிலும் பிரவிருத்தியே ஒய்ந்துபோகும் என்றால் மங்களாசரண விஷயத்திலும் சிஷ்டாசார பரம்பரையால் அனுமானிக்கப்படும் ஓர் சுருதி ப்ரமாணம் உண்டு எப்படியெனின் புத்திமான்கள் மங்களாசரணத்தில் ப்ரவர்த்தித்து இருப்பது வ்யர்த்தமல்ல. கிரந்தம் முடிவுபெறுதலைத்தவிர வேறு பிரயோஜனத்தையுடையதுமல்ல. ஓர் காரியத்தைத் தொடங்குபவன் அதன்முடிவுபெறுதலையே நாடுகிறான் என்பது அனுபவ ஸித்தமாயிருக்கிறது, அவன் வேறுவித பலனைக் கருதுகிறான் என்பதில் யாதொரு பிரமாணமும் கிடையாது. மங்களம் ஸாதன

மென்றும் கிரந்தம் முடிவுபெறுதல் ஸாத்யமென்றும் புத்திமான்கள் கருதியிருப்பது தவறென்றும் கூறமுடியாது. ஏனென்றால் எல்லா புத்திமான்களும் ஒரே மாதிரியாக தவறான விஷயத்தில் ஈடுபடமாட்டார்களல்லவா! ஆகவே மங்களாசரண விஷயத்தில் ப்ரத்யக்ஷம் அநுமானம் இவையிரண்டும் ப்ரமாணங்களாகத் தகுந்தவையல்ல. ஆதலால் ச்ருதிதான் ப்ரமாணமாக இருக்க வேண்டும். இனி விக்னங்கள் உண்டு என்ற நிச்சயம் இல்லாதிருப்பதால் மங்களாசரணம் வேண்டியதில்லையென்றாலும் அவ்விதசந்தேகம்உண்டானாலும் அதைப்போக்க வேண்டியது அவசியமாகும். ஸூத்திரக்காரர் பகவானே ஆனதால் அவருக்கு விக்னங்களே உண்டாகா ஆதலின் மங்களாசரணம் அவருக்குத் தேவையில்லை என்பதும் யுக்தமல்ல. அவருக்கு விக்னங்களிராவிடினும் சிஷ்யர்களுக்கு உண்டாகையால் அவர்கள் மங்களாசரணத்தைக் கையாளவேண்டும் என்பதைப் போதிக்கவே அவர் அவசியம் மங்களத்தை அநுஷ்டிக்கவேண்டும்.

மேலும் அவர் பாரதம் முதலிய நூல்களிலும் மங்களாசரணத்தை அநுஷ்டித்திருக்கவேண்டாம். அவர்சாஸ்திராத்பஹி:மங்களாசரணத்தை அநுஷ்டித்திருந்தாலும் அஸந்நிஹித சிஷ்யர்களும் அறிந்துகொள்ள கிரந்தத்தில் அதை நிவேசனம் செய்தும் இருக்கவேண்டும். ஆகவே ஸூத்திரக்காரர் என் மங்களத்தை அநுஷ்டிக்கவில்லை? கிரந்தத்தில் என் நிவேசிக்கவில்லை?—இவ்வாறான ஆக்ஷேபம் பிறந்தால் சமாதானம் சொல்லவேண்டியது ஒவ்வோர் பாஷ்யகாரரின் கடமையாகுமல்லவா! அதற்காகவே நமது ஸ்ரீமத்வர் அத சப்தத்துக்கு மங்களார்த்த: (மங்கள ப்ரயோஜன:) என்று வியாக்யானம் செய்தது மெச்சத்தக்கதே. அவ்விதஅர்த்தம் அத சப்தத்துக்கு உண்டுஎன்று

ॐकारश्चाथशब्दश्च द्वावेतौ ब्रह्मण: पुरा ।
कण्ठं भित्त्वा विनिर्यातौ तस्मान्मांगलिकावुभौ ॥

முதலிய ப்ரமாணங்களிலும் கோசாதிகளிலும் ப்ரஸித்தமாயிருக்கிறது. ஆகவே பிறபாஷ்யகாரரான ஸ்ரீமத்வர் சொன்னதையும் ஷி சுருதி, யுக்தி அநுபவம் முதலியவைகளால் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இரண்டாவதாக ஒரு சப்தத்தின் பல அர்த்தங்களை ஒரே இடத்திலேயே பண்டிதர்கள் ஒப்புக்கொள்ளலாம். அவ்விதம் பிற பண்டிதர்களும் ஒப்புக்கொண்டும் இருக்கிறார்கள், "ஸௌத்ரார்த்தம் ச்ரௌதம் என்றும் ஆர்த்திகம் என்றும் இரண்டு வகைப்படும். இவ்வாறு பல அர்த்தங்களை ஒப்புக்கொள்வது தோஷமல்ல.

ப்ரத்யுத அலங்காரம்தான்

अल्पाक्षरं असंदिग्धं सारवद्विश्वतोमुखम् ।
अस्तोभमनवद्यं च सूत्रं सूत्रविदो विदुः ॥

என்ற ஸௌத்ரத்தின் லக்ஷணவாக்யத்திலுள்ள விசுவதோமுகம், ஸாரவத் என்ற பதங்களும்

लघूनि सूचितार्थानि स्वल्पाक्षरपदानि च ।
सर्वतः सारभूतानि सूत्राण्याहुर्मनीषिणः ॥

என்ற லக்ஷண வாக்யத்திலுள்ள ஸூசிதார்த்தானி என்ற பதமும் எந்தெந்த அர்த்தம் ஸூசிக்கப்பட்டிருக்கிறதோ அந்த அர்த்தமெல்லாம் ஸௌத்ரத்தின் மகிமையால் விளங்கும். அவைகளும் ஸூத்ரார்த்தம்தான் என்று பண்டிதர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அடியில்கண்ட வாக்யங்களை கவனிக்கவும்.

न चैवं अनेकार्थता दोषः । श्रौतार्थिकभेदत्वस्य उक्तत्वात् सूत्रत्वाच्च । अलङ्कार एव ह्ययं ब्रह्मसूत्राणां यदनेकार्थत्वं । ............... अतः यः कश्चिदर्थः शब्दसामर्थ्येन अर्थवशात् वा प्रतीयते स सर्वः तदर्थ एवेति भवत्ययं अर्थकलापः तन्महिमाधिगतः ॥

M. ராமராவ்,

---

|| श्रीगुरुभ्यो नमः ||

|| शिवाभ्यां नमः ||

# விச்வகீதார்த்தோப ஸம்ஹாரம்.

## ஸ்ரீ பகவத்கீதையின் 18-வது அத்யாய ஸங்கிரஹம்.

**बृहदारण्यानिविष्टं विलुठितमाभीरगोपनारीभिः ।**
**सत्यचिदानन्दघनं ब्रह्मनराकारमालंबे ॥**

இவ்வத்தியாயார்த்தத்தை ஸங்கிரஹமாக இன்று உபன்யசிக்கத் தொடங்குவாம். கொஞ்சகாலத்தில் விஸ்தாரமாக எடுத்துக் கூற அவகாசமில்லை. இவ்வத்தியாயத்தில் கீதாசாஸ்திரத்தின் தாத்பர்யத்தையும் எல்லா உபநிஷத்துக்களின் தாத்பர்யத்தையும் பகவான் அர்ஜுனனுக்கு சுலபமாய் அறிந்துகொள்ள வேண்டியதின் பொருட்டு ஸங்கிரஹமாய் உபதேசித்திருக்கிறார். இவ்வத்யாயத்துடன் இந்த கீதாசாஸ்திரம் முடிந்துவிடுகிறது. இதற்கு உபஸம்ஹாராத்யாயமென்று பெயர். சோக மோஹங்களால் இவ்வுலக சுகத்திலேயே வைராக்யத்தை அடைந்த முமுக்ஷுவாகிய அர்ஜுனனுக்கு,

" अशोच्यानन्वशोचस्त्वं "

என்று ஆரம்பத்தில் பகவான் அர்ஜுனனுக்கு எந்த விஷயங்களை உபதேசம் செய்வதற்காக சூசனை செய்தாரோ நடுவிலுள்ள அத்தியாயங்களிலும் எதை விஸ்தரித்தாரோ அதைத்தான் இவ்வத்தியாயத்திலும் சொல்கிறார். எதற்காகவென்றால், வேதசாஸ்திரங்களின் தாத்பர்யத்தை ஸித்தாந்தம் செய்வதற்குத்தான். இக்காரணம் பற்றித்தான் இவ்வத்யாயத்தில் முன்பு நிரூபிக்கப்பட்ட கர்மயோகம், பக்தியோகம், அஷ்டாங்கயோகம், ஞானயோகம் முதலிய விஷயங்களே நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. முன்பு வெவ்வேறிடங்களிலும் தீர்மானமில்லாமல் கர்மயோகம் முதலியவைகளை விஸ்தாரமாய் நிரூபித்திருப்பதால் ஸித்தாந்தம் கண்டுபிடிப்பது கஷ்டம். இவ்வத்தியாயத்தில் சொன்னவைதான் ஸித்தாந்தங்களாகும். ஒரு விஷயத்தை விஸ்தார ஸங்கிரஹரூபமாய் வர்ணிப்பது,

" इष्टं हि विदुषामेतत्समासव्यासधारणं "

என்ற மஹாபாரத வசனத்தால் யாவருக்கும் ஸம்மதம் என்பது புலப்படுகிறது. ஆரம்பத்தில் அர்ஜுனனுடைய அக்ஞானம் சோக மோகம் இவை துலைவதற்கு ஆத்மஞானத்தையே பகவான் உப தேசித்திருக்கிறார். ஆதலால் இவ்வுபஸம்ஹாராத்தியாயத்திலும் அந்தக் ஞான நிஷ்டையைத்தான் பகவான் உபதேசித்து முடிக்க வேண்டுமேயொழிய கர்ம யோகம் பக்தியோகம் முதலியவை களையல்ல.

" सर्वं कर्माखिलं पार्थज्ञानेपरिसमाप्यते । "
सर्वेवेदायत्पदमामनन्ति ।

என்பாதி வசனங்களால் வேதசாஸ்திரங்களெல்லாவற்றிற்கும் ஆத்மதத்வஞான நிஷ்டையை அடைவதில்தான் தாத்பர்யம் கர் மயோகம் முதலியவைகளால் மட்டிலும் மோக்ஷத்தை அடைந்து விடமுடியாது. அக்ஞானமே அக்ஞானத்தை எப்படி நிவர்த் திக்கும். அந்தகாரம் அந்தகாரத்தை அகற்றுமா? தீபத்தால லவா இருட்டிலுள்ள ரஜ்ஜுவில் தோன்றிய ஸர்ப்பப்ராந்தி நிவர் த்திக்கும். பிராணாயாமத்தாலல்ல என்பது உலகப்ரஸித்தம். இதன் விரிவை ஆகரத்தில் காண்க. ஆகவே கீதைக்குக் ஞானத்தில் தான் தாத்பர்யமென்பது ஸித்தம். ஆகவே இவ்வத்தியாயத்தில் முதலில் கௌண ஸன்யாஸரூபத்தை நிரூபிக்கும் வழியாக கர்ம யோக ஸ்வரூபத்தையும் அதன்பிறகு அதன் பிரயோஜனங்களா கிய பக்தியோக ஞானயோகங்களையும் க்ரமமாய் வர்ணித்திருக்கி றார்.

இங்கு ஒரு சங்கை. உபநிஷதம் கீதை இதுகளின் அர்த் தத்தை இவ்வத்தியாயம் உபஸம்ஹாரம் செய்வதாகக் கூறுவதற் கிடமில்லை. அப்படியிருந்தால் அர்ஜுனன்

" सन्यासस्य महाबाहो "

என்று ஸன்யாஸஸ்வரூபத்தை மட்டிலும் எப்படி ப்ரச்னம் செய் வது தகுதியாகும்? கீதை உபநிஷதம் இவைகளின் தாத்பர்யத் தைச் சொல்லும்படியல்லவா கேட்க்கவேண்டும்? ஆதலால் அர்

ஜுனன் ப்ரச்னத்தைக் கவனித்தால் ஸன்யாஸத்தை இவ்வத்தியாயம் கூறுவதாகத்தான் புலப்படுகின்றதேயொழிய வேறு விஷயங்களையல்லவென்று,

இது ஸரியல்ல.

அர்ஜுனப்ரச்னத்திலிருந்து ஸன்யாஸத்தைமட்டிலும் இவ்வத்தியாயத்தில் சொல்லியிருப்பதாகத் தோன்றினாலும் பகவானுடைய பதிலிலிருந்து ஸர்வசாஸ்த்ரார்தோபஸம்ஹாரம்தான் இவ்வத்தியாயத்தில் தெரிகிறது. இல்லாவிட்டால் ஸன்யாஸ ஸ்வரூபத்தை மட்டிலுந்தான் நிரூபித்து இவ்வத்தியாயத்தை முடித்துவிடவேண்டும். அப்படியில்லாமல்,

“ मन्मनाभवमद्भक्त ” “ निष्ठाज्ञानस्ययापरा ”

என்று பக்தித்யாக ஞானயோகங்களை எப்படி பகவான் சொல்ல முடியும்? இதனால் பகவானுக்கு வேறொரு அபிப்பிராயமும் தெரிகிறது.

அதாவது அர்ஜுனனுடைய ஸன்யாஸ ஸந்தேகத்தை நிவர்த்திப்பதன் மூலமாகஸன்யாஸ ஸ்வரூபத்தைதெரிவிக்கவேண்டும் என்ற விஷயமும்தான். ஆதலால்அர்ஜுனனுக்கும் ஞானயோகம் முதலிய விஷயங்களை நிர்ணயித்துக்கொள்வதில் ஆகாங்க்ஷை இருந்தபோதிலும் இதுவரையில் நிர்ணயிக்காமல் விடப்பட்ட ஸன்யாஸத்தைப் பற்றித்தான் இவருக்கு ஸம்சயம் ஏற்பட்டது. அதை அனுஸரித்து அதைமட்டிலும் அவன் கேட்டான். ஆதலால் அர்ஜுனன் ப்ரச்னம் விருத்தமில்லை.

அர்ஜுனன் பகவானைப்பார்த்து ப்ரச்னம் செய்வதாவது—ஓ பகவானே ஸன்யாஸமென்றும் தியாகமென்றும் முன்புநீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அவைகளின் அர்த்தம் மட்டிலும் தீர்மானிக்கவில்லை. ஆதலால் அவைகளின் தத்துவத்தைத் தங்களிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்பதாக.

இங்கு ஒரு விஷயம் விசாரிக்கவேண்டும். ச்ருதி ஸ்ம்ருதிகளிலும் கீதையிலும் ஸன்யாஸம் முக்கியம் கௌணம் என இருவிதமாக உபதேசிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டில் முக்ய ஸன்யாஸம், வித்வத் ஸன்னியாஸம், விவிதிஷாஸன்னியாஸம்

என்று இரண்டுவிதமாகவும் பிரிக்கபபட்டிருக்கிறது. இவற்றில் எந்த ஸன்னியாஸத்தில் அர்ஜுனன் சம்சயப்படுகின்றான். முக்கிய ஸன்னியாஸத்திலா? அல்லது கௌண ஸன்னியாஸத்திலா? முக்ய ஸன்னியாஸத்திலென்றால் வித்வத்ஸன்னியாஸத்திலா? அல்லது விவிதிஷாஸன்னியாஸத்திலா? இவ்விரண்டிலும் அர்ஜுனன் ஸம்சயப்படுவதற்கு நியாயமில்லை. ஏனெனில் வித்வத் ஸன்னியாஸமென்பது ஆத்ம தத்வக்ஞானோதயமானவுடன் ஞானபலத்தால் கர்மாக்களின் நாசவடிவமாகிய ஸன்னியாஸம் தான். இதை ஸ்ரீ பகவான்

" यस्त्वात्मरतिरेव स्यादात्मतृप्तश्च मानवः "
आत्मन्येव च सन्तुष्टस्तस्य कार्यं न विद्यते ।
सर्वकर्माणि मनसा संन्यस्यास्ते सुखं वशी ।
नवद्वारे पुरे देही नैव कुर्वन्नकारयन् ॥

என்ற ச்லோகங்களால் ஞானிகளுக்குத்தானிந்த ஸன்னியாஸமென்றும் இந்த வித்வத் ஸன்னியாஸிகளுக்கு கர்மாவிலதிகாரமில்லையென்றும் இந்த ஸன்னியாஸத்தில் ஞானத்தால் அக்ஞானம் அதன் கார்யம் இவை அடியோடழிந்துவிடுவதால் கர்மாக்களும் தானாக நழுவிவிடும் இந்த ஸன்யாஸத்தில் புத்தி பூர்வமாக கர்மாக்களின் பரித்தியாகமில்லை. என்பதாகவும் முந்தியே நிர்ணயித்துவிட்டபடியால் அந்த ஸன்னியாஸத்தில் எப்படி ஸம்சயம் ஏற்படும்.

இங்கு ஒரு சங்கை- முந்தின அத்தியாயங்களால் நிர்ணயிக்கப்பட்ட கர்மயோகம் முதலிய விஷயங்களை உபஸம்ஹாரம்செய்யும்பொருட்டு மறுபடியும் இங்கு நிரூபித்திருப்பதுபோல், முன்னத்தியாயங்களால் நிர்ணயிக்கப்பட்ட வித்வத் ஸன்னியாஸத்தையும் இவ்விடத்தில் உபஸம்ஹாரம் செய்வதற்காகச்சொல்லியிருக்கிறாரென்று சொல்லுவது யுக்தம்தான் என்று. இந்த சங்கை சரியல்ல. உபஸம்ஹாரம் செய்ததற்காக இந்த ச்லோகத்திலேயே அந்த வித்வத்ஸன்னியாஸத்தைச் சொல்லவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. அப்படி வித்வத்ஸன்னியாஸத்தை அர்ஜுனன் கேட்டிருந்தால்

" काम्यानां कर्मणां न्यासं "

என்று பகவான் பதில்சொல்லியிருப்பது அவலமாய் முடியும். தவிர ஸன்னியாஸத்தை

"निश्चयं श्रुणु मे तत्र त्यागे भरतसत्तम"
त्यागो हि पुरुषव्याघ्र त्रिविधः संप्रकीर्तितः ।

என்னும் ச்லோகங்களால் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களால் மூன்றுவிதங்களாகப் பிரித்துக்கூறியிருப்பதும் சரியாகாது. வித்வத்ஸன்னியாஸமென்பது முக்குணங்களையும் கடந்ததல்லவா? அதைஎப்படி மூன்றாகப் பிரிக்கமுடியும். கீதாசார்யாள் ஞானிகளுக்கு கர்மயோகத்தில் அதிகாரமில்லை என்பதை

"ज्ञानयोगेन सांख्यानां कर्मयोगेन योगिनां ॥"

என்று முந்தியே நிர்ணயித்துவிடவில்லையா? அர்ஜுனன் வித்வத் ஸன்னியாஸத்தில் ஸம்சயப்பட்டிருந்தால் பகவானுடைய பதிலும் 2—12—14-வது அத்தியாயங்களில் உபதேசித்தபடி இருக்க வேண்டுமேயொழிய மூன்று விதமாகப்பிரித்து பதில் கூறுவதற்கு நியாயமில்லையே? ஆகவே ஸ்ரீ கீதாசார்யாளின் பதிலை பராமர்சம் செய்தால் மூன்றுவிதமாக எந்த ஸன்னியாஸத்திற்கு விபாகம் சம்பவிக்குமோ அதைத்தான் அர்ஜுனன் ப்ரச்னம் செய்திருக்கவேண்டுமென்றும் வித்வத் ஸன்னியாஸத்தை யல்லவென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது. வித்வத் ஸன்னியாஸத்தை இவ்விடத்தில் உபஸம்ஹாரம் செய்திருப்பதாகச் சொல்வதும் தவறு. இவ்விடத்தில் அதை உபஸம்ஹாரம் செய்யாவிட்டாலும் இதே அத்தியாயத்தின் முடிவில்

" सिद्धिं प्राप्तो यथाब्रह्म— इति ते ज्ञानमाख्यातम्- ।
भक्त्या मामभिजानाति— सर्वधर्मान् परित्यज्य- ॥

என்ற ச்லோகங்களால் வித்வத் ஸன்னியாஸ ஸ்வரூபத்தை உபஸம்ஹாரம் செய்திருப்பதால் இங்கு இல்லை. ஆதலால் அர்ஜுனனுக்கு வித்வத் ஸன்னியாஸத்தில் சம்சயமேர்பட நியாயமில்லை. அப்படியே விவிதிஷா ஸன்னியாஸத்திலும் ஏனென்றால்

விவிதிஷா ஸன்னியாஸமென்பது ஞானத்தை அடைவதற்காக சித்த சுத்தியின் பொருட்டு வேதவிஹிதமாயுள்ள கர்மாக்களை சாஸ்த்திரீயமாக விட்டுவிடுவதுதான்.

"सन्न्यस्य श्रवणं कुर्यात्"

प्रत्यक्प्रवणतां बुद्धेः कर्माण्युत्पाद्य शुद्धितः ।
कृतार्थान्यस्तमायान्ति प्रावृडन्तघना इव ॥

என்பதாதி சாஸ்திரங்களால் விவிதிஷா ஸன்யாஸமென்பது விதிக்கப்பட்டிருப்பதால் அவ்வித ஸன்யாஸத்திலுங்கூட ஸாத்விகம் ராஜஸம், தாமஸம் என்று மூன்று விபாகங்கள் பொருந்தமுடியாது. வேதவிஹிதமாயுள்ள கர்மாக்களைப் பயனைக்கருதாமல் அனுஷ்டித்தால் சித்தசுத்தி ஏற்படும். சித்தசுத்தி ஏற்பட்டவுடன் ஞானமுமுதயமாவதற்கு முன்பு தாமனுஷ்டித்துவந்த கர்மாக்களை சாஸ்திரப் பிரகாரமாக விடுவதல்லவா விவிதிஷா ஸன்னியாஸமென்பது இந்த ஸன்னியாஸத்தை ஸாத்விகமாகமட்டிலும் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளலாமேயொழிய ராஜஸமாகவோ அல்லது தாமஸமாகவோ ஒப்புக்கொள்வது சரியில்லையாதலின் மூன்றாக விபாகம் செய்திருப்பது அதிலும் விருத்தம்தான் ஆகையால் வித்வத் ஸன்னியாஸத்திலும் விவிதிஷாஸன்யாஸத்திலும்அர்ஜுனன் சம்சயப்படுவதாகசொல்லமுடியவில்லை. ஏனென்றால் எந்த ஸன்னியாஸத்தில் அர்ஜுனனுக்கு பேதாபேதஸம்சயமேற்பட்டது என்று சிலர் சங்கிப்பதுண்டு இதற்குத்தாம் கூறலாம்.

வித்வத் ஸன்யாஸம், விவிதிஷா ஸன்யாஸம் இவ்விரண்டிலுமே அர்ஜுனனுக்கு ஸம்சயமில்லை. இவ்விரண்டு ஸன்யாஸமும் முக்கிய ஸன்னியாஸம் கௌணஸன்னியாஸத்தில்தான் அர்ஜுனனுக்கு பேதாபேத ஸம்சயம் உண்டாயிற்று. முக்கிய ஸன்னியாஸ ஸ்வரூபத்தில் அர்ஜுனனுக்கு சிறிதும் சம்சயமில்லை. கௌண ஸன்யாஸமாவது வைதிக கர்மாக்களைப் பயனைக்கருதாமல் அனுஷ்டிப்பதுதான். இந்த ஸன்யாஸத்தையும் பகவான்

स सन्यासी च योगी च न निरग्निर्नचाक्रियः ।

என்பதாதி வசனங்களால் உத்தேசித்துள்ளார். பிரயோஜனத்தைக் கருதாமல் வைதிக கர்மாக்களை விடாமல் செய்துவருவதுங்கூட ஸன்னியாஸந்தான். பிரயோஜனத்திலாசையோடுமட்டும் செய்யலாகாது என்பதுதான் கௌண ஸன்னியாஸப் பிரச்னப் பிரதி வசனங்களுக்குத் தாத்பரியம். இவ்விஷயம் மூர்த்தி ஓரி

டத்திலும் காணவில்லை. ஆகவே இது அபூர்வமானதால் இதை இவ்விடத்தில் உபதேசிக்கவேண்டியது அவசியமே. இப்படி கௌண ஸன்யாஸத்தை இவ்விடத்தில் ஒப்புக்கொண்டால் பிரச்நோத்தரங்களிரண்டும் மிகவும் பொருத்தமடையும். ஆகையால் அர்ஜுனனுக்கு கௌண ஸன்யாஸத்தில்தான் ஸம்சயமென்பது ஸித்தம்.

அர்ஜுனனுடையப் பிரச்னாபிப்ராயத்தை அறிந்த ஸர்வக்ஞராகிய பகவானும் கௌண ஸந்நியாஸ ஸ்வரூபத்தை **काम्यानांकर्मणांन्यासं** என்பதாதி சுலோகங்களால் முதலாவதாகச் சொல்லிவிட்டுப்பின்பு அதன் காரியமாகிய "வித்வத் ஸன்னியாஸ ஸ்வரூபத்தையும் **नद्वेष्ट्यकुशलङ्कर्मकुशलेनानुषज्यते** என்பதாதிகளால் உபதேசித்திருக்கிறார்.

பகவானுடைய உத்தரம்.

முதலில் பகவான் ஸன்யாஸத்தியாக சப்தங்களுக்கு அர்த்த பேதம் (வெவ்வேறு அர்த்தம்) இருப்பதாகச் சிலரின் அபிப்பிராயம். ஆனால் உண்மையில் அர்த்தபேதம் சிறிதுமில்லை. ஒரே அர்த்தந்தான் என்று **काम्यानां कर्मणां** என்ற சுலோகத்தால் உபதேசித்தார். அதன்பிறகு ஸாங்கியமீமாம்ஸகர்களின் மதபேதத்தையும் அவற்றில் தமது மத நிர்ணயத்தையும் எடுத்துக்காட்டி இருக்கிறார்.

**त्याज्यं दोषवदित्येके** என்று.

இவற்றில் ஒன்று விசாரிக்கவேண்டும்.

**काम्यानां कर्मणां न्यासं सन्यासं कवयो विदुः ।**
**सर्वकर्मफलत्यागमाहुस्त्यागं विचक्षणाः ॥**

என்று காம்யகர்மாக்களை விடுவது ஸன்யாஸமென்றும் கர்மபலத்திலாசை வைக்காமலிருப்பது தியாகமென்றும் சொல்லியிருப்பதால் இவ்விரண்டும் ஒரே அர்த்தத்தை அறிவிப்பதாக எப்படிச் சொல்வது? தனித்தனி அர்த்தமல்லவா இந்த சுலோகத்தில் புலப்படுகின்றது. இப்படிச் சொல்லாவிட்டால் **काम्यानां, सर्वकर्म- फलत्यागं कवयः विचक्षणाः** என்று பதப்பிரயோகம் எப்படி உசிதமாகும். ஆகையால் "ஸன்யாஸம், தியாகம்" இவ்விரு சப்தங்

களுக்குள் அர்த்தபேதந்தான் பகவானுக்கு அபிமதமென்று தோன்றலாம். **काम्यानां** என்ற சுலோகத்தை மட்டிலும் கவனித்துக்கொண்டு பகவானுடைய அபிப்பிராயத்தை திடீரென்று நிர்ணயித்து விடுவது உசிதமுமில்லை. ஸாஹஸமுமாகும். இதற்கடுத்தச் சுலோகங்களையும் கவனித்தல்லவா பகவானுடைய அபிப்பிராயத்தை நிர்ணயிக்கவேண்டும். இதற்கடுத்த சுலோகங்களில் இவ்விரண்டு சப்தங்களையும் ஒரே அர்த்தத்திலேயேதான். பகவான் பிரயோகித்திருக்கிறார். அதாவது—

**निश्चयं शृणु मे तत्र त्यागे भरतसत्तम ।** என்றும்

**नियतस्य तु सन्यासः कर्मणो नोपपद्यते ।**

**मोहात्तस्य परित्यागस्तामसः परिकीर्तितः ॥**

என்றும் தியாகபதத்தால்ஸன்யாஸத்தையும், ஸன்யாஸபதத்தால் தியாகத்தையும் சொல்லியிருப்பதால்,

**काम्यानां कर्मणां न्यासम्** என்றவிடத்திலும் அவ்விதமோரே அர்த்தத்தில்தான் தாத்பரியம் சொல்லும்படி நேரிடுகிறது. இவ்விதம் சுருதிஸ்மிருதிகளிலும், உலகத்திலும் இவ்விரு சப்தங்களும் ஒரே அர்த்தத்தில்தான் பலவிடங்களில் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. அதை எடுத்துக்காட்டினால் விரிந்துவிடும் ஆதனின் விடுத்தனம். ஆகவே “இவ்விரு சப்தங்களுக்கும், அதிக அர்த்தபேதமில்லை” என்பதைக்காட்டுவதற்காகத்தான் **कवयः विचक्षणाः** என்று பகவான் உபதேசித்திருக்கிறார் என்று சொல்லவேண்டும். அதெப்படியென்றால் “கர்மாவை விடுவது” என்ற பக்ஷத்திலும் “கர்மபலத்தைவிடுவது” என்ற பக்ஷத்திலும் “விடுவது” என்ற அம்சம் பொதுவானதல்லவா? எதைவிடுவதுஎன்பதில்இவ்விருவர்களுக்கு விவாதமிருந்தபோதிலும் விடுவதுதான் ஸன்யாஸமென்ற த்யாகமென்பதில் இவ்விருவர்களுக்கும் சண்டையுண்டா? இல்லை. ஆகவே பகவானுக்கு ஸன்யாஸத்யாக சப்தங்கள் ஒரே அர்த்தத்தையறிவிப்பதாகத்தான் அபிப்பிராயம். இவ்விடத்தில் “காம்யானாம்” என்ற விசேஷணமும் சுருதிஸ்மிருதி ஸஹிதமாயுள்ளன. அச்வமேதாந்தமாகிய ஸகல கர்மாக்களையும் அதன் பலன்களுடன் அனுஷ்டிக்காமல் விடுவதுதான் ஸன்யாஸமென்பதாகத் தெரிவிப்பதன் பொருட்டுத்தான்.

நித்திய கர்மாக்களை விலக்குவதன் பொருட்டல்ல. பொதுவாகக் கர்மாக்களெல்லாவற்றையும் விடுவதுதான் ஸன்யாஸமேயொழிய காம்ய கர்மாக்களைமட்டும் விடுவது ஸன்யாஸமென்று ஒருவாதிகளுமொப்புவதில்லை என்றிந்த வாதிகளின் அபிமானம். ஆகவே கவிப்க்ஷத்திலுங் கூட ஸர்வகர்ம பரித்தியாகந்தான் ஸன்னியாஸமென்ற அபிப்பிராயம் சொல்லவேண்டும்.

இவ்விதம் 'காம்யாநாம்' என்ற விசேஷணத்துக்கு தாத்பர்யம் சொல்லாவிட்டால் ஸித்தாந்தத்தில் 'நியதஸ்யது ஸம்நயாஸ:' என்பதாதிகளால் நித்யம், காம்யம், என்ற பேதமின்றி எல்லாக் கர்மாக்களையுமே எவராலும் விடுவது ஸாத்யமில்லை என்று பகவான் இக்கவி ஸித்தாந்தத்தைக் கண்டனம் பண்ணியிருப்பது எப்படி ஸங்கதமாகும். கர்மாக்களெல்லாவற்றையும் பிரயோஜனத்தைக் கருதாமல் அனுஷ்டித்து வருதல்தான் ஸன்யாஸம் என்ற தியாகம். அந்த ஸித்தாந்தத்திற்கு இப்பூர்வபக்ஷத்திற்கும் பேதமில்லாமலும் ஏற்பட்டுவிடும். அப்படியானல் 'கவய: விசக்ஷணா: என்று பக்ஷபேதத்தை எப்படி பகவான் எடுத்துறைக்கக் கூடும். 'ஸர்வகர்மபலத்தியாகம்' என்ற உத்தரார்த்தத்தால் காம்யம் நித்யம் இவ்விரண்டையும் உதாஹரித்திருப்பது உசிதமாகாது. ஆகையால் 'காம்யானும் கர்மணும்' என்றவிடத்தில் பிரயோஜனத்துடன் கூடிய எல்லாகர்மாக்களுந்தான் சொல்லப்பட்டிருப்பதாக அங்கீகரிக்கவேண்டும்.

(தொடரும்)

வீ. ஜகதீச்வர சாஸ்திரிகள்'

---

# வாரவிருத்தாந்தம்

வண்ணனது மதாபிமானம்:— லக்ஷ்மணபுரியில் வண்ணாஜாதியில் பிறந்த ஒருவனது நண்பன் மஹம்மதிய மதத்தில் சேர்வதாகக் கேட்டு சேர்ப்பவனையும் சேருபவனையும் வேண்டாமென்று பலமுறை தடுத்தான். அவன் வண்ணனறியாமல் சேர்ந்துவிட்டான். இவனுக்கு ஆத்திரமுண்டாகி அவ்விருவர்களையும் கொன்றுவிட்டான். இவனது மதாபிமானத்தை நாம் கொண்டாடினும் அந்த க்ரூரமான செயலை ஆமோதிக்க முடியாது.

மதாபிமானிகள் மெலிந்து நாஸ்திகர் மலிந்த இக்காலத்திலும் ஆங்கிலங்கற்காத பல க்ராமவாஸிகளது மதாபிமானம் அளவிடமுடியாது அதை ஒன்றுபடித்து தக்கவேலை செய்பவரிருந்தால் கலியின் வலிவு குன்றும்.

இடங்கொடுக்கலாமா?— புதுக்கோட்டையில் ஆலயத்தில் கைங்கரியம் புரிந்த தாஸிகளை வேண்டாமென வேலையை விட்டு நீக்கி விட்டனர். சத்ரங்களில் நடைபெறும் அன்னதானத்தைக் குறைக்க முயற்சிக்கின்றனர். படிப்படியாக இன்னும் என்ன என்ன செய்யப்போகிறார்களோ யாரறிவர்? தாஸிகள் துர்மார்கத்தை அவலம்பிப்பதால் கோயிலில் பல அஸந்தர்பங்களுக்கிடமளிப்பதால் பகவானது ஆராதனம் இதில்லாமலே ஸாங்கமாக நடக்கலாம் என சிலருக்குத் தோற்றும். அவர்களுக்கென ஓர் சங்கம் தோன்றி அவர்களது கைங்கர்யத்தின் அவச்யத்தையும் கல்வியையும் கடமையையும் விளக்கி வற்புறுத்திவருகிறது. அவர்கள்பாலுள்ள அனுசாரங்களை யகற்றி தேவஸன்னிதிகளில் நடந்து கொள்ளவேண்டிய மாதிரிகளை ஜனங்களுக்குப் புகட்ட வேண்டும். இன்றுஇதற்கு இடமளித்தால்மற்றும்பற்பலதொல்லைகள் நேறும்.

ஒழுங்காக நடக்குமா?— புதுச்சேரிக்கருகிலுள்ள வீராம்பட்டணத்து ஆலயத்தை தர்மகர்த்தாக்கள் சரிவர பரிபாலனம் செய்யவில்லையென்று ப்ரஞ்ச் அரசாங்கம் அதைத்தன்னுளுகையில்எடுத்துக்கொண்டது. அன்யமதஸ்தரானாலும் பிறர் மதத்தைப் பலர் இன்னாட்டில் பரிபாலித்துவந்ததை சரித்ரம் கூறும். இவ்வரசாங்கம் ஒழுங்காக நாகரீகத்தை இதில் பூரவிடாமல் பூஜாதிகளை நடத்துமானல் எல்லோருக்கும் க்ஷேமம். இல்லையேல்—?

சித்தந்தெளியாதோ?— தேசாபிமானி என்போர் உள்ளத்திலே தீண்டாமைக் கொடுமை என்றும் கரட்டோணன் புகுந்து விட்டது. எத்தினை பேர் எவ்வளவு எடுத்துரைத்தும் நாகரீகம் நிறைந்த அவருக்கு உண்மை விளங்குவதில்லை. இக்கொடுமையை இந்தியர் செய்வதாக ஏற்று அமெரிக்கர் இதைக்கண்டு வெறுப்பதாக நினைத்து நீங்கள் நீக்ரோ என்ற ஜாதியரை கொஞ்சநாளுக்குமுன் உயிருடன் நெருப்பில் தள்ளவில்லையா? நீக்ரோவை சிங்கத்திற்கு உயிருடன் பலியாகக் கொடுக்கவில்லையாஎன ஓர் தேசியப்பத்திரிகை கேட்கிறது. இதென்ன அறியாமை?

தீண்டாதாரை யார் இத்தகைய ஹிம்ஸையைச்செய்தது.? அவரவர்வினைப்படி அந்தந்த ஜாதியில் பிறக்கின்றனர். இவர்களைப் படைத்த பிரும்மன வந்தால்கூட இவர்களுக்கு மதநம்பிக்கை வருதுபோலும். நாலாபுறமும் இதே விஷயத்தை இவர்கள் வர்புறுத்துவதால் நாமும் ஸத்யத்தைக்கூற வேண்டியதாயிருக்கிறது.

பல வழிகள்:— வைதிகதர்மத்தைச் சிதைக்க ஸ்கூல், ரெயில் ஹோட்டல் முதலிய பல வழிகளிருக்கின்றன. ஸ்கூல் இதில் முதலாயிருக்கிறது. பாடபுத்தகங்களில் வர்ணாச்ரம தர்மத்தைக் கண்டித்து ஸ்வேச்சையாக சில மதங்களைத் தோற்றிவைத்தவர்களது சரிதம் கட்டாயமாக கற்கப்படுகிறது. சிறுமூளையில் வைதிகதர்மநிந்தயை ஏற்றிவிட்டால் வேறென்ன வினை வேண்டும்? ஆங்கில கலாசாலைக்கனுப்பினல் அதைப்படிக்காமலிருக்க முடியாது. மீதிவேளைகளில் சிறுவர் அனுசிதமான நாவல்களைப்படிக்க ஆசைகொள்கின்றனர். பெற்றோர் அக்கரைகொண்டு ஆஸ்திகத்தையூட்டும பாரத ராமாயணாதிகளைக் குழந்தைகள் படிக்கும்படி செய்தாலன்றி வேறு வழியில்லை.

சிறந்த வழி:—தாங்கள் எந்தமதத்தினர்? மதாசார்யன் யார்? மதநூல் யாது? என்பதை மறந்த இக்காலத்திலே இவைகளை நன்கு விளக்க ஆண்டுக்கோர் முறை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ சங்கரபவத் பாதாளது அனுக்ரஹத்தால் ஆங்காங்கு அத்வைதஸபை கூடுகிறது. வைதிகரும் லௌகிகரும் பண்டிதரும் மற்றோரும் அந்நாட்களே தம் வாழ்நாளில் நன்னாளாக எண்ணும்படி யிருக்கிறது. இவ்வாண்டில் முடிகொண்டானில் சிறப்பாக நடந்ததை நேயரறிவர். பன்னிரண்டு மாதங்களிலும் பன்னிரண்டு ஜில்லாக்களில் ஷைஸபையை நடத்தி இச்சபையை மாஹாஜனஸபையாக நடத்தும் ஆற்றலுள்ளோரில்லாமலில்லை. மதாபிமானமும் முயற்சியுமே வேண்டும். நம் மதப்ராசாரத்திற்கு இதை விட சிறந்த வழி வேறேது?

வே. ஸோமதேவ சர்மா.